Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, OCTOBER 26, 2023

வியாழக்கிழமை ஒக்டோபர் 26, 2023 | ஒளி: 09 கதிர் 114 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## “நீர் கட்டணத்தில் திருத்தம் இல்லை”

நீர்வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் இவ்வருடம் நீர் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட மாட்டாது என உறுதியளித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# “கூட்டணியுடன் பேசுவது உத்தமம்”

கூட்டணி அரசியல் குறித்து ஜனாதிபதி நன்கு புரிந்து கொள்ள வேண்டும், அமைச்சரவை மாற்றத்தின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் புதன்கிழமை (25) பேசிய நாமல், கூட்டணித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவும், கட்சிக்கு இடையே அமைதியைப் பேணவும் ஜனாதிபதி அறிந்திருக்க வேண்டும் என்றார்.

“நல்லாட்சி அரசாங்கத்தின் போது இரு தலைவர்களும் இரு வேறு திசைகளில் சென்றதன் விளைவு தேசத்தின் ஸ்திரமின்மை மீது தாக்கம் ஏற்படுத்தியது” என்று அவர் கூறினார். எதிர்காலத்தில் முடிவெடுக்கும் போதும் கூட்டணி அரசியலில் ஈடுபடும் போது ஜனாதிபதி பிற தலைவர்களுடன் கலந்துரையாடுவது உத்தமம் என தாம் நம்புவதாக நாமல் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றம் குறித்து கருத்து தெரிவித்த அவர், இது அமைச்சரவை மாற்றமாக கருதப்பட முடியாது எனவும், இது பதவி மாற்றம் மட்டுமே எனவும் தெரிவித்தார்.

“அமைச்சரவை மாற்றத்தை மேற்கொள்ள ஜனாதிபதிக்கு உரிமை உண்டு. எவ்வாறாயினும், இந்த விடயத்தை கூட்டணிகளுக்கு அறிவிக்கவும் கலந்துரையாடவும் அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது” என நாமல் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

# ஆதரவளிக்காவிடின் பொதுத் தேர்தல்

அரசாங்கம் தொடர்வதற்கு ஆதரவளிக்காவிடில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கவனம் செலுத்தியுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சுப் பதவிகளை வழங்குவதில் அநீதி இழைக்கப்பட்டதாக ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது.

மக்கள் கடும் நெருக்கடியில் இருக்கும் வேளையில் அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் மக்களின் பணத்தை வீணடிக்க ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி கடுமையாக வலியுறுத்தியுள்ளார் என்றும் அறியமுடிகின்றது. இது தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையில் தொலைபேசி உரையாடலும் இடம்பெற்றுள்ளதாக தகவல் கசிந்துள்ளது.

தொடர்ச்சி P2



## பெண்களுக்கு இரவு பணி

தகவல் தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிறுவனங்கள், அறிவுச் செயன்முறையை வெளியிலிருந்து வழங்கும் நிறுவனங்கள், வியாபாரச் செயன்மறையை வெளியிலிருந்து நிறுவனங்கள் மற்றும் வேறு நாடுகளில் அமைந்துள்ள வியாபார நிறுவனங்களுக்கான கணக்கு, நிர்வாகம் மற்றும் தொழிநுட்ப நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அலவலகங்களில் பணிபுரிகின்ற பெண்களுக்கு இரவு வேளைகளில் பணியாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கான இயலுமை கிட்டும் வகையில் 1954ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க கடை காரியாலய ஊழியர்கள் தொடர்பான (ஊழியர் மற்றும் வேதனங்கள் முறைப்படுத்தல்) சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2023.08.08 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## முறிகண்டிப் பிள்ளையார் வழக்கு தள்ளுபடி

■ பு.கஜிந்தன்



சுமார் 12 வருடமாக இடம்பெற்ற திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலய உரிமை தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தால் செவ்வாய்க்கிழமை (24) தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதும் பராமரிப்புக்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் ஒப்படைக்கப்பட்டது. தற்போது இந்த ஆலயம் இந்துப் பண்பாட்டு நிதியத்தின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றது. கோவில் வருமானத்தில் ஒரு பகுதி வன்னிப்பிராந்தியத்தில் இந்து சமய வளர்ச்சிக்காக, இந்துப் பண்பாட்டு நிதியத்தின் மூலம் செலவிடப்படுகிறது.

தொடர்ச்சி P2

## செப்டெம்பரில் மட்டும்
# 168 சிறுமிகள் துஷ்பிரயோகம்

2023 செப்டெம்பர் மாதம், 16 வயதுக்குட்பட்ட சிறுமிகள் மீதான பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் 168 வரை பதிவாகியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்படி தகவலை குறிப்பிட்டுள்ளார். இவர்களில் 22 பேர் கர்ப்பமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தரவுகளின்படி, 2021ஆம் ஆண்டில் இலங்கையில் மொத்தம் 11,000 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

தொடர்ச்சி P2

# 8 மணிநேர வேலைக்கு 1,000 ரூபாய் வழங்கவும்



2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐந்தாம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு இணங்க பெருந்தோட்டத் தொழிலாளி ஒருவர் நாளொன்றுக்கு 8 மணித்தியாலம் வேலை செய்தால் ஒரு நாள் வேதனமாக ஆயிரம் ரூபாய் கட்டாயமாக வழங்கப்பட வேண்டும் வர்த்தமானியில் கிலோகிராம் தொடர்பில் எதுவித அறிக்கையும் இல்லை என தொழில் ஆணையாளர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## கழுத்தில் தாக்கினேன் சரிந்தாள்:
# கைதான கணவன் வாக்குமூலம்

■ செ.கீதாஞ்சன்



எங்கள் இருவருக்கு இடையிலும் ஒவ்வொருநாளும் குடும்ப பிரச்சினை ஏற்படும். சம்பவம் தினத்தன்று இருவரும் தாக்கிக்கொண்டோம். நான், மனைவியின் கழுத்தில் தாக்கினேன், அவள் நிலத்தில் விழுந்தாள், நீண்ட நேரம் எழும்பவில்லை தொட்டுப்பார்த்தேன் இறந்துவிட்டாள்.

தொடர்ச்சி P2

# பதவியை துறவுங்கோ ‘ஐயா’

இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும், திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் பதவியை துறக்கவேண்டுமென அக்கட்சியின் பேச்சாளரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் பகிரங்கமாக கோரியுள்ளார்.



அவருடைய முதுமை காரணமாக செயற்பாட்டு அரசியலில் பங்களிப்புச் செய்யமுடியா திருப்பதனால் அவர் தனது பதவியைத் துறக்க வேண்டுமென கோரியுள்ளார்.

தொடர்ச்சி P2

# கறவை திருடினால் ரூ.1 இலட்சம் தண்டம்

கால்நடைகளை திருடும் போது விதிக்கப்படும் அபராதத்தை ஒரு இலட்சம் ரூபாவாக அதிகரிக்கும் வகையில் விலங்குகள் நலச்சட்டத்தில் திருத்தம் செய்யுமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாடளாவிய ரீதியில் கறவை மாடுகளின் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போதைய விலங்குகள் நலச் சட்டத்தின்படி மாடு திருடப்பட்டால் அதிகபட்ச அபராதம் 50,000 ரூபாய் என்றும், அந்தக் குற்றத்திற்கான சிறைத்தண்டனை குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



# இ.தொ.காவின் அதிரடியால் பின்வாங்கிய பதிவாளர் நாயகம்

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழில் இனத்தினை இந்திய வம்சாவளியினர் என்பதை நீக்கி பதிவாளர் நாயகத்தால் வெளியிட்ட சுற்றுநிரூபத்திற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கடுமையான கண்டனத்தை வெளியிட்டிருந்தது.

பதிவாளர் நாயகத்தின் சுற்றுநிரூபத்துக்கு இ.தொ.காவின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான், தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் தினேஸ் குணவர்தன ஆகியோரின் கவனத்துக்கு கொண்டுச் சென்றும் இருந்தனர்.

இ.தொ.காவின் தொடர் அழுத்தத்தினால், ‘இந்திய வம்சாவளியினர்’ என்று பதிவிடலாம் என்ற ஒப்புதல் கடிதத்தை இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமானுக்கு எழுத்து மூலம் பதிவாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.



## பாராளுமன்ற வளாகத்தில் ரகளை
# டயனா உள்ளிட்டோர் விசாரணைக்கு அழைப்பு

பாராளுமன்ற வளாகத்தில் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற கைகலப்பில் குறிப்பிடப்பட்ட இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, பாராளுமன்ற உறுப்பினர்களான சுஜித் சஞ்சய் பெரேரா மற்றும் ரோஹன பண்டார மற்றும் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகள் அனைவரும், விசாரணைக்காக நியமிக்கப்பட்ட குழுவின் முன் அழைக்கப்படவுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தும் குழு அவர்களை 6ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அழைக்க, புதன்கிழமை (25) தீர்மானித்தது. இந்த சம்பவம் தொடர்பான சிசிரிவி காட்சிகளை குழு உறுப்பினர்கள் பார்வையிட்டுள்ளனர்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற மோதல் தொடர்பில் ஆராய சபாநாயகரால் நியமிக்கப்பட்ட குழு பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் முதன்முறையாக புதன்கிழமை (25) கூடியது. பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையிலான இந்தக் குழுவில் சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன, பாராளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் மற்றும் கயந்த கருணாதிலக ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த குழுவிற்கு ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு பெண் பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்குவது என தீர்மானிக்கப்பட்டது. இரண்டு பெண் எம்.பி.க்களையும் நியமனம் செய்யுமாறு ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிக்கு அந்தக் குழு அறிவித்தது. இந்தக் குழு எதிர்வரும் 6ஆம் திகதி கூடி விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் விசாரணை அறிக்கை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்கப்படும் என பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் பாராளுமன்றம் உன்னிப்பாக அவதானம் செலுத்தியுள்ளதுடன், இச்சம்பவம் பாராளுமன்றத்தின் கௌரவத்துக்கு பங்கம் விளைவிப்பதால், இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க குழு தீர்மானித்துள்ளதாக பிரதி சபாநாயகர் தெரிவித்தார். இந்த சந்திப்பில் பாராளுமன்றத்தின் பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்னவும் கலந்துகொண்டார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

## பெண்களுக்கு இரவுப் பணி

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள கடை காரியாலய ஊழியர்கள் தொடர்பான (ஊழியர் மற்றும் வேதனங்கள் முறைப்படுத்தல்) சட்டமூலத்திற்காக சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது.

குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# “கூட்டணியுடன் பேசுவது உத்தமம்”

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் (SLPP) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் (SLFP) இடையிலான மோதல் குறித்து கேள்வி எழுப்பிய போது எம்.பி. நாமல் ராஜபக்ச, அத்தகைய வதந்திகளை மறுத்தார்.

## “நீர் கட்டணத்தில் திருத்தம் இல்லை”

2023 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நீர் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்பட்டதாகவும், நீர் கட்டண திருத்தம் தொடர்பில் பரவி வரும் வதந்திகள் பொய்யானவை எனவும் தெரிவித்தார்.

இவ்வருடம் நீர் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்படாது என உறுதியளிப்பதாகவும், ஆனால் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து கட்டண திருத்தத்திற்கான செலவு மீட்பு சூத்திரம் ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## 8 மணிநேர வேலைக்கு 1,000 ரூபாய் வழங்கவும்

கேகாலை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்குகின்ற அலகொல்ல ,லகிலேண்ட் ,கம்பாஹா, கேகீல்ஸ் பெருந்தோட்ட தொழிலாளர்களினால் தொடர்ந்தும் நடாத்தப்படுகின்ற அகிம்சை வழி போராட்டத்திம் தொடர்பில் பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது. கொழும்பு தொழில் திணைக்களத்தில் தொழில் ஆணையாளர் தலைமையில் புதன்கிழமை (25) கலந்துரையாடல் இடம்பெற்றது. இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ், மேற்படி பெருந்தோட்ட தொழிலாளர்களின் லாப கொடுப்பனவு தொடர்பான பிரச்சனையை மத்தியஸ்தர் சபையின் ஊடாக தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வேலை நிறுத்தப்பட்டிருந்த 21 நாட்களுக்கும் நாளொன்றுக்கு 1,000 ரூபாய் என்றடிப்படையில் 21 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட வேண்டும் என்பதனை தொழில் ஆணையாளர் ஏற்றுக் கொண்டுள்ளார் என்றார்.

## முறிகண்டிப் பிள்ளையார் வழக்கு தள்ளுபடி

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நிர்வகித்து வரும் இவ் ஆலயத்தினை தன்னிடம் மீள ஒப்படைக்குமாறு நீதிமன்றத்திற்கு உத்தரவிடக் கோரி 2011 ஆம் ஆண்டு அடிப்படை உரிமை மனுவொன்றை திருமுறிகண்டிப் பிள்ளையார் கோவிலின் பரம்பரை அறங்காவலர் என்று கூறிக்கொள்ளும் ஒருவர் தாக்கல் செய்தார்.

நீண்ட காலமாக இடம்பெற்ற இவ்வழக்கு மூவர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்களால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. குறித்த ஆலயம் அமைந்துள்ள ஆலய காணி அரச காணி என்பதால் தனி நபர் ஒருவர் ஆலயத்திற்கு உரிமை கொண்டாட முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளது.

> **இப்பகுதியை துரிதமாக அபிவிருத்தி செய்யும் பல்வேறு திட்டங்களை செயற்படுத்தவுள்ளதாக தெரிவித்தார்**

நீண்ட காலமாக இவ் வழக்கு இடம்பெற்று வந்ததால் குறித்த பிரதேசத்தில் அடிப்படை சுகாதார வசதிகள், உட்கட்டுமானப் பணிகள் மற்றும் பிரதேசத்தை அழகுபடுத்தும் பணிகள் மேற்கொள்வதற்கு தடை ஏற்பட்டது. இதன்போது கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க உமாமகேஸ்வரன், ஆலய உரிமை தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் இப்பகுதியை துரிதமாக அபிவிருத்தி செய்யும் பல்வேறு திட்டங்களை செயற்படுத்தவுள்ளதாக தெரிவித்தார்.

## பதவியை துறவுங்கோ ‘ஐயா’

பாராளுமன்றம் 288 நாட்கள் கூடியபோது வெறுமனே 39 நாட்கள் மட்டுமே பாராளுமன்றத்துக்கு இரா. சம்பந்தன் வருகை தந்திருக்கின்றார் , சம்பந்தனின் முதுமை காரணமாக பாராளுமன்றத்துக்கு அவர் தொடர்ச்சியாக வருகை தரமுடியாதிருக்கின்றமை தொடர்பில் நாங்கள் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றோம். விசேடமாக நான் அந்த விடயத்தில் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றேன் என்றார்.

அந்தவகையில் நான் ஒருவிடயத்தினை இந்தச் சந்தர்ப்பத்தில் பகிரங்கமாக தெரிவிக்க விரும்புகின்றேன். சில ஆண்டுகளுக்கு முன்னதாக அவரால் பாராளுமன்றத்துக்கு சமூகமளிக்க முடியாத நிலைமைகள் ஏற்பட ஆரம்பித்த சந்தர்ப்பத்தில் நான் சம்பந்தனிடத்திலேயே நேரடியாக பதவி விலகுமாறு கோரினேன். அதன்போது சம்பந்தன் அதனை நிராகரித்திருந்தார். அத்துடன், அவர் அதற்கான காரணத்தினையும் தெளிவு படுத்தினார் என்றும் கூறியுள்ளார்.

## ஆதரவளிக்காவிடின் பொதுத் தேர்தல்

மேற்கொள்ளப்பட்டிருப்பது அமைச்சு மாற்றத்தில் உள்ளடங்களின் மாற்றமே தவிர புதிய பதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்றும் அறியமுடிகின்றது.

புதிய அமைச்சுப் பதவிகளை வழங்கி மக்கள் மீது அழுத்தங்களை பிரயோகிக்க தான் தயாரில்லை என பொதுஜன பெரமுன கட்சியிடம் ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்றும் அறியமுடிகின்றது.

## 168 சிறுமிகள் துஷ்பிரயோகம்

2022 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ள சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளில் குறைந்தது 41% பாலியல் துஷ்பிரயோகத்தின் கீழ் வருகின்றன என்றார்.

அந்த வகையில், இந்த ஆண்டு செப்டம்பரில் பதிவான வழக்குகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது, இது ஓர் அதிகரிப்பை காட்டுகிறது என்றும் கூறினார்.

## கைதான கணவன் வாக்குமூலம்

என்னசெய்வதென்று தெரியாமல், வீட்டுக்கு பின்புறமாக மலசலகூடத்துக்கு அருகில் உள்ள குழியில் போட்டு மூடிவிட்டுள்ளதாக கணவன் வாக்குமூலம் அளித்துள்ளார்.

முல்லைத்தீவு - நீராவிபிட்டி கிழக்கு கிராமத்தில் இளம் பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன் அப்பெண்ணின் கணவன், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீராவிபிட்டி கிழக்கு பகுதியில் சில நாட்களாக வாடகைக்கு வீடு ஒன்றை பெற்று தங்கி வந்த இளம்குடும்ப பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டு வீட்டின் பின்பாகவுள்ள மலசலகூடத்திற்கு அருகே குழி தோண்டி புதைக்கப்பட்டிருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தினை சேர்ந்த 23 வயதான பெண்ணும், முள்ளியவளை குமாரபுரத்தை சேர்ந்த 23 வயதான ஆணும் திருமணம் முடித்து நீராவிபிட்டி கிழக்கு பகுதியிலுள்ள வாடகை வீடொன்றில் கடந்த மூன்று வாரமாக வசித்து வந்த நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் குறித்த பெண் கொலை செய்யப்பட்டதற்கான காரணத்தினை முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி K.சங்கீத் தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். குறித்த இளம் குடும்ப பெண் தனது தாயாரிடம் தொலைபேசியில் நாளாந்தம் உரையாடுவதாகவும் ஒக்டோபர் 21ஆம் திகதிக்குப் பின்னர் மகளின் தொலைபேசி துண்டிக்கப்பட்டிருந்துள்ளது,

இந்நிலையில், மகளும் மருமகனும் வசிக்கும் வீட்டிற்கு அப்பெண்ணின் தாயார் திங்கட்கிழமை (23) சென்று பார்த்தபோது வீட்டில் யாரும் இருக்கவில்லை. வீட்டின் பின்புறம் பார்த்தபோது புதிதாக மண்ணால் நிரப்பட்ட குழி ஒன்று காணப்பட்டுள்ளது. இதனால் சந்தேகம் அடைந்த அப்பெண்ணின் தாய், முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்தே சடலம் கைப்பற்றப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட கணவன் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் புதன்கிழமை (25) முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை நவம்பர் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

## கறவை திருடினால் ரூ.1 இலட்சம் தண்டம்

கால்நடை அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகளுக்கு கால்நடை பாதுகாப்பு சட்டத்தில் 1 இலட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கும் சரத்துக்களை உள்ளடக்குமாறு கால்நடை அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகளுக்கு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

# விவசாய மற்றும் தொழில்நுட்பத் துறைகளின் புரட்சிகர மாற்றம்

விவசாய மற்றும் தொழில்நுட்பத் துறைகளின் புரட்சிகர மாற்றத்திற்கான பல்வேறு புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் போது, பொறியியலாளர்களின் பங்களிப்பு மிக மிக்கியமானது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளின் விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சுக்களின் கீழ் முன்னெடுக்கப்படும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதாகவும் மேலதிக நிபுணத்துவத் தெரிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை தொடர்பில் தேடியறிவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 117 ஆவது இலங்கை பொறியிலாளர்கள் நிறுவனத்தின் வருடாந்த அமர்விலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொறியியலாளர் நாட்டுக்கு ஆற்றும் சேவையை கௌரவிக்கும் வகையில், வாழ்நாளில் ஒரு முறை மாத்திரம் வழங்கப்படும் “விஷ்வலிங்கம்” விருது பொறியியலாளர் கே.எல்.எஸ். சஹாபந்துவிற்கு ஜனாதிபதியினால் வழங்கப்பட்டது.

இலங்கை பொறியியல் சபையின் தலைவர் திலக் டி சில்வாவினால் “Hand book



for Electricians” என்ற மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்ட நூல் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதோடு, இலங்கை பொறியியல் நிறுவனத்தின் தலைவர் கலாநிதி கமல் லக்சிறியினால் ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசொன்றும் வழங்கப்பட்டது.

நிகழ்வில் மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

“தொழில்நுட்ப புத்தாக்க முயற்சிகள் மற்றும் விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்துடன் இலங்கையை புதிய பொருளாதார முறைமையை நோக்கி

> **10 இலட்சம் ஏக்கர் வரையிலான காணிகள் உள்ளதாகவும், விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்தின் போது அவற்றைப் பயன்படுத்த திட்டமிடப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்**

இட்டுச் செல்வதற்கு ஒன்றுபடுமாறும் பொறியியல் நிறுவனங்களிடம் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார்.

போட்டித்தன்மை, டிஜிட்டல் மாற்றம் மற்றும் பசுமை பொருளாதாரம் ஆகிய துறைகளில் பொறியியலாளர்கள் சிறப்பான பணியை ஆற்றி வருவதாகவும், அந்த துறைகளைப் பலப்படுத்தினால் நாட்டில் துரித பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பல்வேறு துறைகளிலும் பொறியியலாளர்களின் பங்களிப்பை மேம்படுத்த எதிர்பார்ப்பதாகவும், அதனை உரிய வகையில் பயன்படுத்திக் கொள்வதற்கான திட்டமிடலுடன் செயற்படுவதாகவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

மகாவலி வலயம் மற்றும் தோட்டப் பகுதிகளில் பயன்படுத்தாத 7 - 10 இலட்சம் ஏக்கர் வரையிலான காணிகள் உள்ளதாகவும், விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்தின் போது அவற்றைப் பயன்படுத்த திட்டமிடப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

## பிடிபடாத மீன்களையே இறக்குமதி செய்ய அனுமதி

இலங்கையில் அறுவடை செய்யப்படாத மீன்களையே இறக்குமதி செய்ய அனுமதித்துள்ளதாக கடற் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு செவ்வாய்க்கிழமை (24) விஜயம் மேற்கொண்ட கடற் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாவட்ட கடற்றொழில் திணைக்களத்திற்கு சென்று அதிகாரிகள் , உத்தியோகத்தர்கள் அத்தோடு மாவட்ட கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

சீனாவிடம் இருந்து மீன்கள் இறக்குமதி செய்யப்படுவது தொடர்பாக வினவிய போது, தகவலில் உண்மைநிலை இருப்பது போல் தெரியவில்லை. என்னுடைய இராஜாங்க அமைச்சுக்கு தான் இலங்கை கடற்தொழில் கூட்டுதாபனத்தை கண்காணிக்கின்ற , செயற்படுத்துகின்ற பொறுப்பை கொடுத்திருக்கின்றேன். அவர் நேர்மையாக , நியாயமாக, சட்ட பூர்வமாக செய்ததாக தான் கூறுகிறார்.

இலங்கையை சூழ வளம்மிக்க கடல் இருக்கின்ற நிலையில் வெளிநாடொன்றில் இருந்து மீன்களை இறக்குமதி செய்யும் நிலை ஏன் ஏற்பட்டது என வினவிய போது, இலங்கை கடற்தொழில் கூட்டுஸ்தாபனத்திற்கு எனது பணிப்புரை என்னவென்றால் இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இலங்கையில் மிக குறுகிய அளவில் அறுவடை செய்யப்படுகின்ற அல்லது அறுவடை செய்யப்படாத மீன்களை தான் இறக்குமதி செய்யலாம் என கூறியிருக்கின்றேன். நியாயமான விலையில், தரமானதாக, திணைக்களத்தின் சட்ட திட்டங்கள் உட்பட்டவையாக இருக்க வேண்டும். இவ்வாறே இறக்குமதி செய்ய முடியும் என கூறியிருக்கின்றேன். அந்தவகையில் தான் இறக்குமதி செய்ததாக கூறுகிறார்கள். அதில் முறைகேடு இருப்பதாக எனக்கு தெரியவில்லை. அவ்வாறு இருக்குமாக இருந்தால் நிச்சயம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆனால் ஊடகங்களில் தவறான செய்திகள் வந்திருக்கின்றது. இது தொடர்பாக ஆராய்ந்து கொண்டிருக்கின்றேன். தவறுகள் ஏதும் கிடைக்கவில்லை.

இலங்கையில் மின்சார கட்டண அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் பாமர மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் இது தொடர்பாக உங்களது நிலைப்பாடு என்ன என வினவிய போது, இன்று நாடு இருக்கின்ற நிலையிலும் உலகத்தினுடைய போக்குகள் யுத்தங்கள் சூழ்ந்திருக்கின்ற சூழலில் விலையேற்றம் என்பது தவிர்க்க முடியாமல் தான் இருக்கிறது என்றார்.

# "மகிழ்விக்கும் முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும்"

ஷேன் செனவிரத்ன

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்பதும் அவ்வாறு வழங்கப்படாவிடின் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்காமல் இருக்க எவரேனும் முயற்சிப்பதும் அங்கீகரிக்க முடியாதது என முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

பல அமைச்சுக்கள் ஒரே வேலையைச் செய்வதற்குப் பதிலாக, அனைத்தையும் ஒன்றிணைத்து ஒரே அமைச்சைக் கட்டியெழுப்ப தற்போதைய ஜனாதிபதி செயற்பட்டு வருவதாகவும், நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்தித்து அனைவரும் ஆதரவை வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

இயன்றளவு அமைச்சுப் பதவிகளை வழங்கி அனைவரையும் மகிழ்விக்கும் முறைக்கு முற்றுப்புள்ளி வைத்து ஜனாதிபதியின் வேலைத் திட்டம் பாராட்டப்பட வேண்டியது என்றார்.




கண்டியில் செவ்வாய்க்கிழமை (24) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கைத்தொழில் அமைச்சுக்கு அமைச்சர் ஒருவர் இருக்கும்போது, முதலீட்டு ஊக்குவிப்பு துறைக்கு மற்றுமோர் அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், ஒரே வீச்சுடன் அமைச்சுக்களை அமைச்சர் ஒருவரின் கீழ் கொண்டு வருவது தொடர்பில் ஜனாதிபதியின் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் சுகாதார அமைச்சில் ஏற்பட்ட பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகள் காரணமாக உரிய அமைச்சுப் பதவியை வகிப்பதற்கு வைத்தியரே பொருத்தமானவர் என ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாகவும் அந்த தீர்மானத்துக்கு தானும் இணங்குவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சர்வதேச நாணய நிதியம் கூறியது போன்று மின்கட்டணத்தை அதிகரித்து புதிய முதலீட்டாளர்களைக் கொண்டு வந்துள்ள போதிலும், தற்போதுள்ள முதலீட்டாளர்களைத் தக்கவைத்துக்கொள்வதும் பிரச்சினையாக மாறியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ஐஸுடன் ஒருவர் கைது



பாணந்துறை - அலுபோமுல்ல பிரதேசத்தில் இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட நபர் பாணந்துறை- திக்துடுவ பகுதியைச் சேர்ந்தவர் எனவும் அவரிடம் இருந்து 40 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருளை கைப்பற்றப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் பாரிய போதைப்பொருள் கடத்தல்காரரர் என்றும் துபாயில் இருந்து போதைப்பொருள் கடத்தலைக் கையாளும் நபரின் நெருங்கிய உறவினர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## நாவல குஞ்சும் நால்வரும் கைது

கொட்டிகாவத்தை சனச வங்கியிலிருந்து சுமார் ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டதுடன், மேலும் 5 குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றவாளியான "நாவல குஞ்சு" என்பவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக மேல் மாகாண தெற்கு மாவட்ட குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட நாவல குஞ்சு என்பவருக்கு எதிராக கடந்த 2021ஆம் ஆண்டு முதல் இன்று வரை பதிவுசெய்யப்பட்ட சுமார் 13 குற்ற வழக்குகளும் நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என கொட்டிகாவத்தை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் நாவல குஞ்சு என்பவரின் மனைவியும் உள்ளடங்குவதோடு,

**"திருடப்பட்ட தங்க நகைகள், கைக்கடிகாரம், பித்தளை விளக்கு மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி, ரைஸ் குக்கர் ஆகியவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது**

பொருட்களை திருடிய குற்றச்சாட்டின் கீழ் ஏனைய சந்தேக நபர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருடப்பட்ட 463 கிராம் பெறுமதியான தங்க நகைகள், 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கைக்கடிகாரம், பித்தளை விளக்கு, தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் ரைஸ் குக்கர் ஆகியவை அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொட்டிகாவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







## இரண்டு மாடி கட்டிடம் கையளிப்பு

மன்னார் – சிலாவத்துறை மத்திய மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட"குவைத் ஸகாத்" (Kuwait Zakath) நிறுவனத்தினால் புதிய இரண்டு மாடிக் கட்டிடத்தின் திறப்பு விழா புதன்கிழமை (25) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் நடைபெற்றது.

கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் வேண்டுகோளுக்கு இணங்க "குவைத் ஸகாத் ஹவுஸ்" நிதியுதவியுடன் இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதற்காக செலவிடப்பட்ட தொகை 200 இலட்சம் ரூபாயாகும். இப்பாடசாலையில் சுமார் 350 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இரண்டு தளங்களைக் கொண்ட, கீழ் தளத்தில் 3 வகுப்பறைகளும், மேல் தளத்தில் பிரதான மண்டபமும் உள்ளன.

## மரம் வீழ்ந்ததில் நசுங்கியது ஓட்டோ

கம்பளை - அட்டபாகை தமிழ் கல்லூரியில் நடைபெற்ற பூஜையில் பங்கேற்பதற்காக தாய் மற்றும் இரு பிள்ளைகளை ஏற்றிச் சென்ற முச்சக்கர வண்டியின் மீது பெரிய மரமொன்று வீழ்ந்ததில் முச்சக்கர வண்டி பலத்த சேதமடைந்துள்ளது.

முச்சக்கரவண்டியில் இருந்த தாய் மற்றும் இரண்டு பிள்ளைகள் மற்றும் சாரதி வண்டியிலிருந்து இறங்கிய சில நிமிடங்களில் மரம் விழுந்ததாக தெரிவிக்கப்படுகிறது,

இதனையடுத்து, அப்பகுதி மக்கள் மற்றும் தோட்ட நிர்வாகத்தினர் மரத்தை அகற்றியுள்ளனர்.





## வெள்ளைக்கல் அழகர் பெருமாள் கோவில் கும்பாபிஷேகம்

பழைமையும் புராதன தொன்மையும் வாய்ந்த மாத்தளை (A9) வெள்ளைக்கல் அருள்மிகு அழகர் பெருமாள் திருக்கோவில் கும்பாபிஷேக பெருவிழாவை முன்னிட்டு புதன்கிழமை (25) பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகின.

இன்று வியாழக்கிழமை 26ஆம் திகதி காலை 8.00 மணி முதல் சுவாமிகளுக்கு பக்தர்கள் எண்ணெய் காப்பு சாத்தி வழிபட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை 27ஆம் திகதி காலை 5:00 மணிக்கு மகா கணபதி பூஜையுடன் தொடர்ந்து கிரியைகள் நடைபெற்று, ஆலய பிரதம சீர்வளர்சீர் சிவ பொன்முடி முருகானந்த தேசிக சுவாமிகள் தலைமையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

இந்த ஆலயத்தினை ஆகம முறைப்படி எல்கடுவ

**"கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு இன்று (26) முதல் எண்ணெய் காப்பு சாத்தி வழிபாடு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அடியார்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது**

பாலேந்திரன் குழுவினர் மற்றும் உக்குவளை நவரெட்னராஜா குழுவினர் இணைந்து புனருத்தானம் செய்துள்ளனர்.

எனவே, வெள்ளக்கல் ஆலய கும்பாபிஷேக கிரியைகளில் பக்த அடியார்கள் கலந்துகொண்டு நாராயண பெருமாளின் திருவருள் கடாச்சத்தை பெற்றுக் கொள்ளுமாறு ஆலய தர்மகர்த்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## அமெரிக்க தூதரகத்துக்கு சென்று திரும்பியவரை காணவில்லை

யாழ்ப்பாணத்திலிருந்து விசா அலுவல்கள் நிமித்தம் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்திற்குச் சென்று அலுவல்களை நிறைவு செய்த பின்னர் விடுதிக்கு திரும்பிய முதியவரைக் காணவில்லை என உறவினர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.



கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்திற்கு கடந்த 23ஆம் திகதியன்று சென்று அங்கு விசா அலுவல்களை நிறைவு செய்து விட்டு ஆட்டுப்பட்டித் தெருவில் உள்ள விடுதி ஒன்றுக்கு உறவினர்களுடன் முதியவர் திரும்பியுள்ளார்.

அவர் கடைக்குச் செல்வதாகத் தெரிவித்து விடுதியிலிருந்து புறப்பட்டு அன்று பிற்பகல் 3 மணியளவில் வெளியே சென்றுள்ளார்.

அவரை இன்று வரை காணவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதியிலிருந்து புறப்பட்டுச் செல்லும் போது, பற்றர் கலர்சேட் மற்றும் வேட்டி அணிந்திருந்ததாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இவர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் 077-4354409 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

## இறைச்சியுடன் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் கைது

வனவிலங்கு அதிகாரிகளின் கண்களில் மண்ணைத்தூவி மிக நீண்ட நாட்களாக மாடுகளை வேட்டையாடி அவற்றின் இறைச்சியைப் பொதியாக்கி வீட்டிலுள்ள குளிர்சாதனப் பெட்டியில் வைத்து விற்பனை செய்து வந்த தெஹியத்தக்கண்டிய சிவில் பாதுகாப்பு திணைக்கள பாதுகாப்பு உத்தியோகஸ்தர் வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகளினால் செவ்வாய்க்கிழமை (24) கைது செய்யப்பட்டுள்ளார்.

வன விலங்கு பாதுகாப்பு திணைக்களத்திற்கு கிடைத்த இரகசிய தகவலின்



அடிப்படையில் குளிர்சாதனப் பெட்டியில் தனித்தனியாக ஒவ்வொரு கிலோவாகப் பொதி செய்யப்பட்டிருந்த 7 கிலோ கிராம் இறைச்சியைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

## உக்குவளையில் டெங்கு அபாயம்

ஏ.எம்.ஜலீல்

உக்குவளை பிரதேசத்தில் டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

டெங்கு தொற்றுக்கு உள்ளான உக்குவளை இளைஞன், மாத்தளை வைத்தியசாலையில் கடந்தவாரம் மரணமடைந்தார். வரக்காமுறயைச் சேர்ந்த பாடசாலை மாணவியொருவரும் டெங்கு தொற்றால் வைத்தியசாலையில் மரணமானார்.

எனவே, இவற்றைக் கருத்திற்கொண்டு பொதுமக்கள் தத்தம் வீட்டுச் சுற்றுப்புறங்களைத் துப்புரவாக வைத்திருப்பதுடன், தண்ணீர் தேங்கும் இடங்களை இனங்கண்டு அழிக்குமாறும் அறிவுறுத்தியுள்ளனர்.


இதேவேளை, திடீர் சோதனையின்போது டெங்கு பரவும் வகையில் தம் சுற்றுப்புறங்களை வைத்திருப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

## தற்காலிகமாக மூடப்படும் வீதி

மண்சரிவு அபாயம் காரணமாக பசறை - ஹிகுருகடுவ வீதியைத் தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக மண் மற்றும் பாறைகள் சரிந்து வீழ்ந்தமையினால் கொடமுதுன பிரதேசத்தில் வீதி தடைப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அபாயத்தைக் கருத்திற்கொண்டு குறித்த வீதியைத் தற்காலிகமாக




மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து குறித்த வீதியை சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கறவை கரிசனையும் கண்டுகொள்ளப்படாத மேய்ச்சல் தரையும்

உள்நாட்டில் உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ளக்கூடியவற்றில் கவனம் செலுத்திப் பெருக்கிக்கொள்ளாது இறக்குமதியிலேயே தங்கியிருப்பதால், பெருந்தொகையில் அந்நியச் செலாவணியைச் செலவிடவேண்டிய நிர்ப்பந்தம் ஒவ்வோர் அரசாங்கங்களுக்கும் ஏற்பட்டுள்ளது. எனினும், உள்ளூர் விவசாயிகள், உற்பத்தியாளர்களின் கனவை நனவாக்குவதைப் போலவே வாக்குறுதிகளை அரசியல்வாதிகள் அள்ளிவீசுவர். இறுதியில், இறக்குமதியிலேயே தங்கியிருப்பர்.

இதில் முக்கியமாகப் பால் மாவைக் குறிப்பிட்டுச் சொல்லாம். பசும்பால் பயன்பாட்டை ஊக்குவிக்கத் தவறியதால் பால் மா இறக்குமதிக்காகப் பெருந்தொகை பணத்தை செலவிட நேரிடுகின்றது. கிடைக்கும் பசும் பாலில் இருந்து உற்பத்திச் செய்துகொள்ளக்கூடிய ஏனைய பண்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை அல்லது தரமான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதில்லை என்பதே யதார்த்தம்.

எனினும், பசும் பாலுக்கான கொள்வனவு விலை அதிகரிக்கப்படுமென, பண்ணையாளர்களை மகிழ்விக்கும் வகையில், பாதீடுகளில் முன்மொழிவுகளை முன்வைப்பர். அதனை நடைமுறைப்படுத்தாமலே விட்டுவிடுவர். இதனால், பண்ணையாளர்களே பாதிக்கப்படுவர்.

வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட பிரதேசங்களில் இருக்கும் பாற் பண்ணையாளர்களை ஊக்குவித்தால், தன்னிறைவை காணாவிடினும், உள்ளூர் தேவைக்கு போதுமான பசும்பாலை உற்பத்திச் செய்துகொள்ளலாம். ஆனால், அவற்றைப்பற்றி அரசாங்கமே சிந்திப்பதே இல்லை. சிந்தித்திருக்குமாயின் மயிலத்தமடு, மாதவணை மேய்ச்சற்தரை பிரச்சினைக்கு என்றோ தீர்வை கண்டிருக்கும்.

அந்த மேய்ச்சற்தரையை பயன்படுத்தும் பண்ணையாளர்கள், தங்களுடைய போராட்டத்தை முன்னெடுத்து, புதன்கிழமை 25ஆம் திகதியுடன் 41 நாட்கள் நிறைவடைந்தன. வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றனவே தவிர, நடைமுறைப்படுத்துவதில்லை. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் விடுக்கப்பட்ட பணிப்புரையும் கிடப்பிலேயே போடப்பட்டுள்ளன. புத்தர் சிலையை வைக்கின்றனர். வேறுமாவட்டங்களை சேர்ந்த பெரும்பான்மையினத்தவர்கள் மாதவனை காணியினை அபகரிப்பதற்கு முயற்சிக்கின்றனர் என்பது மட்டுமே உண்மையாகும்.

அந்த மேய்ச்சற்தரை பிரச்சினைக்கு உரியத் தீர்வை கண்டிருந்தால் அங்கிருக்கும் பாற்பண்ணையாளர்கள் பெரும் நன்மை அடைந்திருப்பர். போதியளவான மேற்ச்சற்தரை இன்மையால், பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். பசுக்களுக்குப் போதியளவில் புற்கள் கிடைப்பதில்லை. இன்னும் சிலர், மாடு வளர்ப்பதையே கைவிட்டுள்ளனர்.

இந்நிலையில்தான், கறவைகளை களவெடுத்தால் ஒரு இலட்சம் ரூபாய் தண்டம் அறவிடப்படும் என அறிவித்துள்ள புதிய விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, அதற்கு ஏற்ற வகையில் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கியுள்ளார். இதனூடாக கறவைகள் திருடப்படுவதும், இறைச்சிக்காக அறுக்கப்படுவதையும் ஓரளவுக்குத் தடுத்து நிறுத்த முடியும். அதுமட்டுமன்றி, குளிரூட்டப்பட்ட வாகனங்களின் வந்து, மாடுகள் களவாடப்படுவதாகவும் கம்பஹா மாவட்டத்திலேயே கூடுதலான மாடுகள் களவாடப்பட்டுள்ளன என்றும் கவலைகொண்டுள்ளார். கறவைகள் மீதான கரிசனையை மயிலத்தமடு, மாதவணை மேய்ச்சற்தரை விவகாரத்திலும் காண்பித்து, அப்பிரச்சினைக்கு உரியத் தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டுமென நாமும் வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள் www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

உரிமை என்பது தமக்கானது மட்டும் எனும் எண்ணம் ஆள்பவர்களுக்கு உருவாகிவிட்டது. அத்துடன், சுதந்திரமும் தங்களுக்கான சொத்து என வெளிப்படையாகக் காட்டுகின்றனர். நடத்தையில் நீதி, நியாயம் அறவே இல்லை. தங்கள் செயல்களில் இறுமாப்பு அடைகின்றவர்கள். எதிர்காலத்தின் தாக்கங்களை உணர்வதே இல்லை. உலக மாற்றங்கள் இயல்பானவை. சர்வாதிகாரம் என்பது வெறும் புஷ்வாணம் என்பதை உணர்வார்கள் இல்லை. மக்கள் பலம் பற்றி அறியாமல் இருப்பது வீழ்ச்சியைத் தரும். இத்தகையவர்கள் தங்களைத் தாங்களே இழக்கின்றார்கள்.

கற்பனையில் பல அரசாங்கங்கள் இயங்குகின்றன. மக்கள் குரல்கள் இவர்களுக்குக் கேட்கவில்லை என நடிக்கிறார்கள்.

எதுவும் நிரந்தரம் இல்லை. பொய்மை கருகிவிடும். கர்மா எவரையும் விட்டுவிடாது. கர்மா, செய்த தவறுகளுக்குத் தண்டனை வழங்கும்.

இயற்கை நியதிகூட, 'கர்மா' என்பதில் ஐயம் இல்லை. ஆண்டவன், துட்டர்களை மன்னிப்பதும் இல்லை, மறப்பதும் இல்லை.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# சிறுபான்மையினருக்கு தீர்வில்லாத நில ஆக்கிரமிப்பு

ஹஸ்பர் ஏ ஹலீம்

சிறுபான்மை இன மக்களின் பூர்வீக நிலங்கள் தொடர்ந்தும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டே வருகிறது. திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலக பகுதியில் இந்த நிலவரம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அண்மையில் அரிசி மலை விகாரைக்கு அண்மித்த பகுதியில் பௌத்த மதகுரு ஒருவரினால் பூஜா பூமி என்ற அடிப்படையிலும் தொல்பொருள் என்ற போர்வையில் நிலங்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றன.



அரிசிமலை விகாரையை அண்மித்த பல ஏக்கர் நிலங்கள் தனியார் மக்களுக்குச் சொந்தமான விவசாய காணியாகும் இவர்களின் வாழ்வாதாரம் மீன் பிடி விவசாயம் சேனை பயிர்ச் செய்கை என ஜீவனோபாயமாக காணப்படுகிறது.

அப்பாவி மக்களின் காணிக்குள் அடாத்தாகக் கையகப்படுத்த முனையும் பௌத்த பிக்குகளை யாரும் கட்டுப்படுத்த முடியாத நிலைக்குப் போகின்றது.

ஏழை மக்களின் காணிகளை அதுவும் சிறுபான்மை சமூகத்தினரின் காணிகளே கபளீகரம் செய்கின்றனர். பூஜா பூமி, தொல்பொருள் திணைக்களத்தின் மூலமான வர்த்தமானி அறிவித்தல் என மக்கள் காணிகளை அவர்களது விவசாய பூர்விக நிலங்களைக் கையகப்படுத்த முனைகின்றனர்.

இது தொடர்பில் உரிய தரப்புக்கள், அம்மக்களுக்கு நிரந்தர தீர்வினை பெற்றுத் தருவதில்லை எனவும் அங்கலாய்க்கின்றனர். தேர்தல் காலங்களில் வாக்கு கேட்பதற்காக வரும் அரசியல் தலைமைகள் அரசியல்வாதிகள் காணி பிரச்சினை என்றால் வருவதில்லை, வெறுமென அறிக்கைகளை மாத்திரமே விடுகிறார்கள், செயலில் காட்டுவதில்லை. தீர்வில்லாமல் வாழ்க்கை தொடர்கிறது எனவும் தெரிவிக்கின்றனர்.

பிரச்சினைக்கான தீர்வு இல்லாமல் திருகோணமலை மாவட்ட சிறுபான்மை பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுவது வருத்தமளிக்கிறது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கூட பங்கேற்காத நிலையில் காணப்படுகிறார்கள். சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் நசுக்கப்பட்டு வருகின்றன. பெரும்பான்மை இன மக்கள் யாருமே இல்லாத இடத்தில் பௌத்த விகாரை அமைக்கவும் சிலை வைக்கவும் முயற்சிக்கின்ற பௌத்த மதகுருக்கள் மூலமாக மக்களுக்கான தொடர் பிரச்சினையாக இலுப்பைக்குளம் பகுதியிலும் நடந்தேறுகிறது.

எந்த அரசாங்கம் மாறி மாறி ஆட்சிக்கு வந்தாலும் நிலப் பிரச்சினைகள் தீர்வதில்லை. விவசாய நிலங்கள், மக்கள் காணிகள் அடாத்தாக கையகப்படுத்த முனைகின்றனர். இதன் மூலமாக நல்லிணக்கம் நாட்டில் சீர்குலைக்கப்படுகிறது.

கிண்ணியா பிரதேசத்தில் உள்ள குரங்குபாஞ்சான் பகுதியில் பௌத்த மதகுரு தலைமையில் ஐவர் அடங்கிய குழு அங்கு சென்றதனால் பதற்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தனியாருக்கு சொந்தமான நிலத்தில் இவர்கள் ஏன் செல்ல வேண்டும் புதையல் தோண்டவா? அல்லது வேறு நடவடிக்கைக்காக என ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் காணி கபளீகரம் செய்ய வந்திருப்பார்கள், எல்லைக் கற்களை இடுவார்கள் என்ற அச்ச நிலை குடியிருப்பாளர்களிடத்தில் ஏற்பட்டுள்ளது.

இது போன்ற காணி பிரச்சினை மூலமாகத் திருகோணமலை மாவட்டத்தில் பல இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. பௌத்த பிக்குகள் ஒரு இடத்தில் போராட்டம் செய்தார்கள் சில இடங்களில் சிறுபான்மை அரசியல்வாதிகள் பொதுமக்கள் என இலுப்பைக்குள விகாரை கட்டுமான பணியின்போது, வீதி மறியல் போராட்டங்களும் இடம்பெற்றுள்ளன. சட்ட ரீதியான தடை உத்தரவு, கிழக்கு மாகாண ஆளுநரின் தடை உத்தரவு என கூறப்பட்ட போதிலும், அதையும் மீறி விகாரை கட்டிடப்பணி, விகாரைக்கான பெயர்ப்பலகை இடப்பட்டுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது, கூட்டத்தைக் குழப்பிய தேரருடன் கலைந்து சென்ற ஆளுநர், பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற நிலைவரமும் அண்மைக் காலத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இருந்த போதிலும், ஆர்ப்பாட்டம் செய்வதற்கு சிறுபான்மை சமூகத்துக்கு நீதிமன்றம் ஊடான தடையும் இலுப்பைக்குள விவகாரம் தொடர்பில் விதிக்கப்பட்டிருந்து அவர்களின் கருத்துச் சுதந்திரம் பறிக்கப்பட்டது. இவ்வாறான நிலையில், இருக்கும்போது, இவ்விடயங்கள் கண்டிக்கத்தக்கது. திருகோணமலை, புல்மோட்டை பகுதியில் முஸ்லிம் மக்களுக்கு சொந்தமான வயல் நிலங்கள் பௌத்த பிக்குவால் ஆக்கிரமிக்கப்பட்டு, அப்பாவி பொதுமக்கள் புத்த பிக்கு தரப்பினரால் தாக்கப்பட்ட சம்பவம் தமிழ், முஸ்லிம், மக்களிடையே பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக நில அபகரிப்புக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றது. விகாரைகள் என்ற பெயரில் தமிழ் முஸ்லிம் மக்களின் வரலாற்றை மாற்றியமைக்கும் வகையில் குடியிருப்புக்களுக்கு மத்தியில் விகாரைகள் அமைக்கப்படுகின்றது. அதேநேரம் எல்லை கிராமங்களில் வயல் நிலங்கள் குடியேற்றங்கள் என்ற பெயரில் அபகரிக்கப்படுகின்றது.

புல்மோட்டை பகுதியிலும் முஸ்லிம் மக்களுக்கு சொந்தமான வயல் நிலங்கள் புத்த பிக்குகளினால் "பூஜா பூமி" என்றபெயரில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அங்கு முஸ்லிம் விவசாயிகள் மற்றும் பெண்கள் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் திட்டமிட்டு இனக்கலவரத்தை தூண்டும் வகையில் இனவாத செயற்பாடுகள் அதிகரித்த வண்ணம் உள்ளது அரச இயந்திரமும் பாதுகாப்பு தரப்பினரும் வேடிக்கை பார்ப்பவர்களாக இருப்பது தமிழ், முஸ்லிம் மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது

புல்மோட்டையில் ஆக்கிரமிக்கப்படும் விவசாய நிலங்கள் மக்களிடம் மீள வழங்கப்படவேண்டும். திட்டமிட்டு தமிழ், முஸ்லிம் மக்கள் மீது நடத்தப்படும் இனக்குரோத செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் ஸ்ரீபிரசாத் தெரிவித்துள்ளார். அன்றாடம் உழைத்து தங்களது ஜீவனாம்சத்தைக் கழிக்கும் மக்களின் துயர் துடைக்க யாருமின்றி கண்ணீர் வடிக்கின்றனர். அத்துமீறி தனியார் காணிக்குள் நுழைய இவர்களுக்கு சண்டித்தன அதிகார போக்கை வழங்கியது யார் என்பதே கேள்வியாக உள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் இந்த பிரச்சினை தொடராக இருக்கிறது குறிப்பாக சிறுபான்மை சமூகம் வாழும் பகுதிகளில் இது தொடர்கின்றன.

இந்த நிலை இன்றி மக்கள் அன்றாட வாழ்வாதாரமாக விவசாயம் மீன் பிடியை நிம்மதியாக செய்து வாழ வேண்டும் அவர்களது காணிக்குள் சுதந்திரமாகப் பயிர்களைச் செய்து வாழ வேண்டும் எந்த தடையோ தொல்பொருள் திணைக்களத்தின் தலையீடோ, பௌத்த மதஸ்தலங்களை அமைப்பதோ, புத்தர் சிலை வைப்பதோ என்ற பிரச்சினை வராமல் நிம்மதியாக வாழ வழி விட்டுக் கொடுக்க வேண்டும்.

தமிழ் முஸ்லிம் மக்களின் காணிகள் அபகரிப்பதை நிறுத்த வேண்டும் இதற்கான நிலையான தீர்வினை உரியத் தரப்புக்கள் முன்வைக்க வேண்டும் என மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

## கடிதங்கள்

### உருப்படியற்ற உக்குவளை படலை

உக்குவளை, கண்டி - மாத்தளை ரயில் நிறுத்துமிடத்து அப்பால் பிரதான வீதியில் ரயில் கடவை அமைந்துள்ளமை அறிந்ததே. இந்தக் கடவையில் இரு பக்க இரும்பு படலையில் நீளம் சுமார் 70 அடியாகும்.

தினம்தோறும் ரயில் வரும் நேரங்களில் வாகனத் தடைக்காக இங்கு பணியாற்றும் பணியாளர், சற்று சிரமத்தோடு ஓடோடிச்சென்று இந்த படலையை மூடி, பின்னர் திறந்து விடுவார். இந்த படலையானது சில நேரங்களில் சீராக இருப்பதுமில்லை.

பல ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட பணியாளர் அறையும் கவனிப்பாரற்று இன்றும் இருக்கிறது. எனவே, இந்த அறையிலிருந்து விசை மூலமாகப் படலையைத் திறந்து மூடும் வகையில் வசதியை ஏற்படுத்துமாறு கோரிக்கை விடுகின்றனர்.

சில காலங்களுக்குமுன் ரயில் கடவை ஒரு வாகனம் செல்வதற்கேற்றவாறு குறுகியதாக இருந்தபோது, அவ்விடம் சற்று அகலமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த படலை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஏ.எம்.ஜலீல்




# யாழ்ப்பாணத்தில் பிறந்த பாளி அறிஞர்

## தேவாநம்பிய ராஜாவை அசோகன் என அடையாளம் கண்டவர்



கலாநிதி. கா.இந்திரபாலா

ஆண்டு 1851. கொழும்பு அக்காடெமியின் (இன்றைய ரோயல் கல்லூரி) பரிசளிப்பு விழா. ஒவ்வோர் ஆண்டிலும் மிகச்சிறந்த மாணவனாகச் சித்திபெறும் இளைஞனுக்கு கௌரவம் மிக்க ரேணர் பரிசு (Turnour Prize) வழங்கப்படும். 1851இல் அப் பரிசு முத்து குமாரசுவாமி என்ற இளைஞனுக்கு கிடைத்தது.





லும்பினி அசோகன் கல்வெட்டு

### முத்து குமாரசுவாமி

முத்து குமாரசுவாமி கொழும்பில் பிறந்த இளைஞர். அவருடைய தந்தையார் ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமி முதலியார். பிரித்தானிய ஆளுநருக்குப் பிரதம தமிழ் மொழிபெயர்ப்பாளராக (*Chief Tamil Interpreter Mudaliyar to His Excellency the Governor*) கடமையாற்றிப் பின்னர் 1833இல் அமைக்கப்பட்ட இலங்கைச் சட்ட சபையின் தமிழ்ப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர்.

முத்து குமாரசுவாமி பின்னர் பிரபல வழக்கறிஞராகவும் நிர்வாகியாகவும் விளங்கி, விக்டோரியா மகாராணி வழங்கிய சேர்ப் பட்டத்தையும் (*knighthood*) பெற்றார். இப்பட்டத்தைப் பெற்ற முதலாவது இலங்கைத் தமிழர் இவரே.

பல மொழிகளைக் கற்ற அறிஞராகவும் விளங்கிய முத்து குமாரசுவாமி, பௌத்த பாளி நூல்களாகிய தாடாவம்ச (*Dthvamsa*) மற்றும் ஸுத்தநிபாத (*Sutta-nipta*) ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர். அதுவும் ஒரு காலம்! தமிழில் உள்ள தாயுமானவர் பாடல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்.

இருபதாம் நூற்றாண்டில் பிரபல கலாவிமர்சகராகப் போற்றப்பட்ட ஆனந்த குமாரசுவாமியின் தந்தை முத்து குமாரசுவாமி என்பது குறிப்பிடத் தக்கது.

### ரேணர் பரிசு பெற்ற பிறர்

குமாரசுவாமி குடும்பத்தில் அடுத்த மூன்று தலைமுறைகளைச் சேர்ந்தோருக்கும் ரேணர் பரிசு கிடைத்தமை கவனிக்கத் தக்கது. முத்து குமாரசுவாமியின் சகோதரி மகன் பொன்னம்பலம் அருணாசலம் (பின்னர் சேர்ப் பட்டம் பெற்றவர்) 1868இலும், அருணாசலத்தின் மகன் மகாதேவா (பின்னர் சேர்ப் பட்டம் பெற்றவர்) 1903இலும், மகாதேவாவின் மகன் பாலகுமார் (பின்னர் பிரபல சிவில் சேவை நிர்வாகி) 1937இலும் ரேணர் பரிசைப் பெற்றனர்.

> **பாளியில் எழுதப்பட்ட மகாவம்ச நூலை ஆங்கிலத்தில் முதன்முதலாக மொழிபெயர்த்தவர் ரேணர் ஆவர்**

### யார் இந்த ரேணர்?

இளைய ஜோர்ஜ் ரேணர் (*George Turnour Junior*) யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். அவர் பிறந்த திகதி 1799 மார்ச் 11. அது யாழ்ப்பாணத்துக்கு ஆங்கிலேயர் வந்து ஆட்சியைத் தொடங்கிய காலம்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவில் நடைபெற்ற போர்களின் விளைவாக ஒல்லாந்தர் ஆண்ட இலங்கையின் பாகங்கள், யாழ்ப்பாணம் உட்பட, ஆங்கிலேயர் கைக்கு மாறின. யாழ்ப்பாணத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வந்த பிரித்தானிய அதிகாரிகளுள் ஒருவராக ஜோர்ஜ் ரேணர் என்பவர் தன் படைப்பிரிவுடன் வந்து யாழ்ப்பாணக் கோட்டையில் 1795இல் தன் அதிகாரப் பொறுப்பை ஏற்றார். இவர் பின்னர் ஒரு பிரெஞ்சுப் பெண்ணை மணம்முடித்துக் கோட்டையில் வாழ்ந்த காலத்தில் இவரது முதல் பிள்ளையாகப் பிறந்தவர்தான் இளைய ஜோர்ஜ் ரேணர் (தந்தைக்கும் மகனுக்கும் ஒரே பெயர்).

> **ரேணர் மகாவம்ச மொழிபெயர்ப்பை வெளியிட்டு, 1837இல், பிரின்ஸெப் பிராமி எழுத்தைப் படித்து இந்திய வரலாற்றாய்வுக்குப் பெரும் தொண்டு செய்தார்**

### இங்கிலாந்துக்குப் பயணம்

யாழ்ப்பாணக் கோட்டையில் பிறந்து வளர்ந்த இளைய ரேணர் தனது 12ஆவது வயதில், 1811இல், உயர்பள்ளிப் படிப்புக்காக இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். அங்கு பள்ளிப் படிப்பையும் பல்கலைக்கழகப் படிப்பையும் முடித்தபின், ரேணர் இலங்கைச் சிவில் சேவைப் பரீட்சையில் தேர்ச்சிபெற்று 1820இல் இலங்கைக்குத் திரும்பிவந்தார்.

### மகாவம்ச மொழிபெயர்ப்பு

சபரகமுவ மாகாணத்தில் 1825இல் இருந்து அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய காலத்தில், ரேணர் சிங்கள, பாளி மொழிகளை நன்கு கற்று, நாட்டின் வரலாற்றைக் கூறும் மகாவம்ச நூலைப் பற்றிக் கேள்வியுற்று, அதன் ஓலைப் பிரதி ஒன்றை அதிக சிரமத்துடன் தேடிப்பெற்று, 1836இல் அதன் பெரும் பாகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

பாளியில் எழுதப்பட்ட மகாவம்ச நூலை ஆங்கிலத்தில் முதன்முதலாக மொழிபெயர்த்தவர் ரேணர் ஆவர். இவர் மகாவம்சத்தை மொழிபெயர்த்து கொண்டிருந்த காலத்தில் ஓர் ஆங்கிலேயப் பாதிரியாரும் பழைய சிங்கள வரலாற்று நூல்கள் சிலவற்றை மொழிபெயர்த்துக்கொண்டிருந்தார். அவர் பெயர் வில்லியம் பொக்ஸ் (*Rev. William Fox*).


பொக்ஸ் பாதிரியார் இலங்கையில் தன் கடமைகளை முடித்து ஓய்வு பெற்று இங்கிலாந்துக்குச் சென்றபின் 1833இல் அவர் மொழிபெயர்த்த நூல்களாகிய மகாவம்ச, ராஜரத்னாகரய மற்றும் ராஜாவளிய ஆகியவை லண்டனில் அச்சிடப்பட்டன. அவருடைய மொழிபெயர்ப்பு சிங்கள மகாவம்சத்தை மொழிபெயர்ப்பு என்பது கவனிக்கத் தக்கது. இதனால், மூல நூலாகிய பாளி மகாவம்சத்தை முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ரேணர் ஆவர்.

### பிராமி எழுத்து

மகாவம்சத்தை இலங்கையில் ரேணர் மொழிபெயர்த்துக் கொண்டிருந்த காலத்தில், வட இந்தியாவிலும் வரலாற்றாய்வில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு மிகுந்த ஆர்வம் ஊட்டும் நிகழ்ச்சிகள் சில நடைபெற்றுக்கொண்டிருந்தன.



(மாஸ்கி : தேவாநம்பியஅசோகா)





இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளில் ஆங்கிலேயர் நிர்வாகத்தில் கடமையாற்றி கொண்டிருந்த இளம் பிரித்தானிய அதிகாரிகள் பலர் நாட்டில் பரவலாக இருந்த தொன்மையான கல்வெட்டுக்களைக் கண்டனர். இவற்றின் பொருளை அறிய ஆவலுடையோராய் இந்தியப் பண்டிதர்களைக் கேட்டபோது எவருக்கும் அவற்றைப் படிக்கத் தெரியவில்லை. சிறப்பாக, ஒரு குறிப்பிட்ட எழுத்தில் பல இடங்களில் பாறைகளிலும் பெருந்தூண்களிலும் தெளிவாக வெட்டப்பட்ட நீண்ட கல்வெட்டுக்கள் ஜேம்ஸ் பிரின்ஸெப் (*James Princep*) என்ற ஆங்கிலேய இளைஞரின் கவனத்தை ஈர்த்தன. இக் கல்வெட்டுக்களின் எழுத்தை நாம் இன்று பிராமி என்று கூறுவோம். இப் பழைய கல்வெட்டுக்களை நாம் இன்று அசோகப் பேரரசனின் கல்வெட்டுக்களாக அறிவோம். பிறின்ஸெப் எடுத்த விடாமுயற்சியின் பயனாகப் பிராமி எழுத்தை வாசிக்க முடிந்தது. அது இன்னொரு சுவையான கதை. பிரின்ஸெப் தனக்குக் கிடைத்த கல்வெட்டுப் பிரதிகளைத் தாமதமின்றிப் படித்து, அவற்றின் பொருளை வெளியிட்டார். ரேணர் மகாவம்ச மொழிபெயர்ப்பை வெளியிட்டு ஒரு சில மாதங்கள் செல்லும்முன், 1837இல், பிரின்ஸெப் பிராமி எழுத்தைப் படித்து இந்திய வரலாற்றாய்வுக்குப் பெரும் தொண்டு செய்தார். இருவரும் ஒரே ஆண்டில் பிறந்தவர்கள் என்பது கவனிக்கத் தக்கது.

### தேவாநம்பிய பியதஸி ராஜா

பிரின்ஸெப் வாசித்த பிராமிக் கல்வெட்டுக்களில் மன்னன் பெயர் தேவாநம்பிய பியதஸி ராஜா என்று காணப்பட்டது. (இக் கட்டுரையில் சிறிய படத்தில் நான்கு வேறுபட்ட இடங்களில் உள்ள அசோகன் கல்வெட்டுக்களில் காணப்படும் தேவாநம்பிய பியதஸி என்ற பெயரைப் பார்க்கலாம்: வரி 1 லும்பினி, 2 ராம்பூர்வ, 3 தில்லி தோப்ரா, 4 அல்லாஹாபாத். பெரிய கல்வெட்டுப்படம் நேபாளத்தில் புத்தர் பிறந்த லும்பினியில் அசோகன் எழுப்பிய பெருந்தூணில் உள்ள கல்வெட்டு. மூன்றாவது படம் லும்பினியில் உள்ள அசோகன் தூண்.)

> **தேவாநம்பிய என்பது அசோகன் கல்வெட்டுகளின் பிராகிருத மொழியிலும் பாளி மொழியிலும் காணப்படும் வடிவம்**

புராணங்களில் கொடுக்கப்பட்ட ஆதிகால மன்னர்களின் பட்டியல்களைப் பார்த்தபோது பியதஸி என்ற பெயருடன் எவரையும் காணமுடியவில்லை. இதனால் மன்னனை அடையாளம் காண்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டது.

இலங்கையில் ரேணருடைய மகாவம்ச மொழிபெயர்ப்பின் மூலம் 'தேவாநம்பிய' என்ற பெயருடைய ஒரு மன்னன் (திஸ்ஸ மன்னன்) அநுராதபுரத்தில் ஆண்டதைப் பிரின்ஸெப் அறிந்திருந்தார். வேறு எவருக்கும் அப் பெயர் இருந்ததாக அவருக்குத் தெரியவில்லை.

ஆகவே, அநுராதபுரத்தின் திஸ்ஸ மன்னன் தான் பௌத்த மதத்தில் கொண்டிருந்த பற்றின் விளைவாக, அம்மதத்தின் கருத்துக்களைப் பரப்புவதற்கு இந்தியாவின் பல்வேறு இடங்களில் இக்கல்வெட்டுக்களைப் பொறிப்பித்திருக்கலாம் என்ற கருத்தை பிரின்ஸெப் வெளியிட்டார்.

### ரேணரின் பதில்

இலங்கையில் இருந்து ரேணர் இதற்குப் பதிலளித்தார். தேவாநம்பிய பியதஸி ராஜா அநுராதபுரத்து மன்னன் அல்லன் என்றும் அவன் இந்தியப் பேரரசனாகிய அசோகன் என்றும் ரேணர் எடுத்துரைத்தார். பாளி நூலாகிய தீபவம்ச நூலில் அசோகனுக்குப் பியதஸ்ஸி என்ற பெயர் கொடுக்கப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

இது சரியென்பது பின்னர் கிடைத்த அசோகன் கல்வெட்டுக்கள் மூலம் தெரியவந்துள்ளது. கர்நாடகத்தில் மாஸ்கி என்ற இடத்தில் 1915இல் கண்டறியப்பட்ட அசோகன் கல்வெட்டில் 'தேவாநம்பிய அஸோக' என்றும் பின்னர் குஜர்ரா என்ற இடத்தில் கிடைத்த அசோகன் கல்வெட்டில் 'தேவாநம்பிய பியதஸி அஸோக ராஜா' என்றும் மன்னன் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.



லும்பினி அசோகன் தூண்

உண்மையில் ரேணருக்கு முன் 1833இல் பொக்ஸ் பாதிரியார் மொழிபெயர்த்து வெளியிட்ட சிங்கள நூல்கள் வழியாகவும் அசோகனுக்குப் பியதஸ்ஸி என்ற பெயர் இருந்தது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அசோகன் கல்வெட்டுக்கள் பிரின்ஸெப் அறிஞரால் வாசிக்கப்பட்டபோது பொக்ஸ் பாதிரியார் இறந்து சில ஆண்டுகளாகிவிட்டது. அவர் எழுதிய முக்கிய தகவலை எவரும் அப்பொழுது கவனிக்கவில்லை. இதனால், பியதஸ்ஸி ராஜாவை அசோகன் என அடையாளம் கண்ட சிறப்பு ரேணருக்குக் கிடைத்தது.

### தேவாநம்பிய

தேவாநம்பிய என்ற விருதுக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. இது தேவாநம் + பிய என்ற இரு சொற்களைக்கொண்டது. தேவர்களால் விரும்பப்படுபவர் என்ற பொருளைக் கொடுக்கும். தேவாநம்பிய என்பது அசோகன் கல்வெட்டுகளின் பிராகிருத மொழியிலும் பாளி மொழியிலும் காணப்படும் வடிவம். சம்ஸ்கிருதத்தில் இது 'தேவாநாம் + ப்ரிய என வரும். ஆதி இலங்கையின் பிராகிருதத்தில் 'தெவனபிய' எனவும், பின்னர் ஹெள (ஆதிச் சிங்கள) மொழியில் 'தெவனபா' எனவும் வரும்.

இந்த விருதினை அசோகனும் திஸ்ஸ மன்னனும் மட்டுமல்லாது, இவர்களுக்கு முன்னரும் பின்னரும் பல மன்னர்கள் பயன்படுத்தியுள்ளனர். அசோகனின் பேரனாகிய தசரத மன்னன் இவ் விருதினைப் பெற்றிருந்தான். இலங்கையில் திஸ்ஸ மன்னனுக்குப் பின் பல மன்னர்கள் இதனைப் பயன்படுத்தினர். அசோகன் காலத்தில் பொதுப்பட மன்னரைக் குறிக்கும் சொல்லாகவும் இது பயன்பட்டது. அசோகனின் கல்ஸிக் கல்வெட்டில் தேவாநம்பியர்கள் என்று பன்மையில் 'மன்னர்கள்' என்பதுக்குப் பதிலாக இது வருகின்றது.

### வானவர் அன்பன்

தேவாநம்பிய என்பதற்கு ஒரு பொருத்தமான, அழகான தமிழ் மொழிபெயர்ப்பு வானவர் அன்பன் என்பதை மறுக்கமுடியாது. இமயவர் அன்பன் என்பதும் அவ்வாறே. வட இந்திய மன்னர்கள் தேவாநம்பிய எனச் சூடிய விருதைச் சேர மன்னர்கள் வானவர் அன்பன், இமயவர் அன்பன் எனப் பெயர்த்துச் சூடினர் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. இவ் விருது பின்னர் வானவரம்பன், இமயவரம்பன் எனத் திரிபடைந்தது எனத் தோன்றுகிறது.

> **விருதுகளைச் சூடிக்கொள்ளும் வழக்கம் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்து மன்னர்களால் தொடக்கப்பட்டது**

### எகிப்தில் இருந்து இலங்கை வரை

மண்ணுலக மன்னர்கள் தாங்கள் விண்ணுலகத் தேவர்களால் விரும்பப்படுபவர்கள் என்று அறிவிக்கும் விருதுகளைச் சூடிக்கொள்ளும் வழக்கம் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்து மன்னர்களால் தொடக்கப்பட்டது. பின்னொரு காலத்தில் அவர்களை வெற்றிகொண்ட மேற்காசியப் பாரசீக மன்னர்கள் தங்களையும் அவ்வாறே தேவர்கள் அன்பைப் பெற்றவர்கள் என்ற விருதைப் பயன்படுத்தினர். பின்னர் பாரசீகப் பண்பாட்டின் செல்வாக்கு வடமேற்கு இந்தியாவை வந்தடைந்தபோது இப்படியான ஒரு விருது, அதாவது தேவாநம்பிய என்ற விருது இந்தியாவின் மகதப் பேரரசின் மன்னர்களால் சூடப்பட்டது. அங்கிருந்து அவ் விருது தமிழ்நாட்டில் வானவர் அன்பன் / இமயவர் அன்பன் என்றும் இலங்கையில் தெவனபிய என்றும் மாறியது. இப்படியான விருது வழக்கற்றுப் போனமை வியப்புக்கு உரியதல்ல. ஒரு மன்னன் தன்னைத் தேவர்களின் அன்பன் என்று கூறிக்கொள்வது தென் ஆசியாவில் வளர்ந்த சமயத் தத்துவங்களுக்குப் பொருத்தமானதாக இருக்கவில்லை. மாறாக, தன்னைத் தேவர்களின் அடியான் என்று சொல்வதே விரும்பத் தக்கதாக இருந்தது எனலாம். தம்மை வானவர் அன்பர் என்று மன்னர் கூறிக்கொண்ட சேர நாட்டில், பின்னர் ஐயன் அடிகள் என்று பெருமையுடன் சொல்வது விரும்பத் தக்கதாகியது. அதற்கும் பின்னர், அண்மைக்காலத்தில், அதே சேரநாட்டில் 'பத்மநாபதாஸ' என்று திருவிதாங்கூர் மன்னர் விருது ஒன்றைச் சூடினர்.

பௌத்த அரசுகளில் 'புத்ததாச' (புத்தர் அடியான்) என்பது விரும்பத்தக்கதாகியது. இற்றைக்கு 1500 ஆண்டுகளுக்கு முன் அநுராதபுரத்தில் ஆண்ட ஒரு பௌத்த தமிழ் மன்னன் (கல்வெட்டில் வரும் பெயர்: ள பரி தெவ = இளம் பாரி தேவன்) 'புத தஸ' (புத்த தாஸ = புத்தர் அடியான்) என்ற விருதைப் பெற்றிருந்தான். இவனுக்கு முன்னரும் அநுராதபுரத்து மன்னர்கள் இவ் விருதைச் சூடியிருந்தனர்.

தேவர்களின் அன்பர்களாக இருந்த நிலை மாறி மன்னர்கள் தேவர்களின் அடியார்களானார்கள்.

இஸ்ரேல்

# “பயங்கரவாதம் பொது எதிரி”



பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான் இஸ்ரேல் சென்றடைந்து அந்நாட்டு ஜனாதிபதி ஹெர்சாகை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இதனையடுத்து, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவைச் சந்தித்தார். பின்னர் இருவரும் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது ஜனாதிபதி இம்மானுவல் மேக்ரான் கூறுகையில், “இஸ்ரேலுக்கும், பிரான்ஸூக்கும் பயங்கரவாதம் பொது எதிரி. இதில் இஸ்ரேல் தனியாக இல்லை. ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராக ஒன்றிணைந்தவர்கள் ஹமாஸூக்கு எதிராகவும் ஒன்றிணைய வேண்டும். ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான போரில் உலக அளவில் ஒன்றிணைந்தது போல, ஹமாஸூக்கு எதிரான போரிலும் பிரான்ஸ் ஒன்றிணையும். பலஸ்தீன பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் இஸ்ரேல் தீர்வு கண்டால் மட்டுமே மத்திய கிழக்குப் பகுதியில் அமைதி நிலைத்தன்மை ஏற்படும்” என தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணம்:

# இங்கிலாந்தை வீழ்த்திய தென்னாபிரிக்கா



இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், மும்பையில் செவ்வாய்க்கிழமை (24) நடைபெற்ற நடப்புச் சம்பியன்கள் இங்கிலாந்து உடனான போட்டியில் தென்னாபிரிக்கா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

தென்னாபிரிக்கா: 399/7 (50 ஓவ.) (துடுப்பாட்டம்: ஹென்றிச் கிளாசென் 109 (67), றீஸா ஹென்ட்றிக்ஸ் 85 (75), மார்கோ ஜன்சன் ஆ.இ 75 (42), ஏய்டன் மார்க்ரம் 42 (44) ஓட்டங்கள். பந்துவீச்சு: அடில் ரஷீட் 2/61)

இங்கிலாந்து: 170/10 (22 ஓவ. ) (துடுப்பாட்டம்: மார்க் வூட் ஆ.இ 43 (17), குஸ் அட்கின்ஸன் 35 (21) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜெரால்ட் கொயட்ஸி 3/35, லுங்கி என்கிடி 2/26, மார்கோ ஜன்சன் 2/35, ககிஸோ றபாடா 1/38)

போட்டியின் நாயகன்: ஹென்றிச் கிளாசென்

லக்னோவில் நடைபெற்ற மற்றைய போட்டியில் நெதர்லாந்தை இலங்கை வென்றிருந்தது.

சென்னையில் இன்று (26) பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஆப்கானிஸ்தானை பாகிஸ்தான் எதிர்கொள்ளவுள்ளது.

சீனா

## விண்வெளியில் அறுவடை



அமெரிக்கா, ரஷியா, ஐரோப்பா, ஜப்பான், கனடா ஆகிய நாடுகள் இணைத்து சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை அமைத்து உள்ளது. அதேபோல, சீனா, சொந்தமாக விண்வெளியில் டியாங்காங் என்ற ஆய்வு மையத்தை உருவாக்கி ஆய்வு செய்து வருகிறது. இதற்காக சீன விண்வெளி வீரர்கள் அங்கு தங்கி உள்ளனர்.

ஷென்சோ-16, விண்கலத்தில் விண்வெளி வீரர்கள் இருவர் மற்றும் சீனா ஏரோனாட்டிக்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் என 3 பேர் பயணம் செய்து சீன விண்வெளி ஆய்வு மையத்தில் கீரை, சின்ன வெங்காயம், செர்ரி, தக்காளி செடிகளை வளர்த்தனர்.

பூமியில் தேவையான சூரிய வெளிச்சம், தண்ணீர் இருப்பதால் செடிகள் எளிதில் வளரும். ஆனால் விண்வெளியில் இந்த சாத்தியக்கூறுகள் இல்லாததால் சீனா, செடிகளைப் பயிரிடுவதற்கான சிறப்பு சாதனத்தைத் தாவர வளர்ச்சிக்குத் தேவையான வெப்பநிலை, ஈரப்பதம், ஒக்சிஜன், கார்பன் டை-ஒக்சைடு உள்ளிட்டவை சரியான அளவில் கிடைக்கும் வகையில் உருவாக்கி இருந்தது.

இந்நிலையில், அவர்கள் பயிரிட்ட கீரை, செர்ரி, தக்காளி மற்றும் சின்ன வெங்காயம் ஆகியவை நன்கு வளர்ந்துள்ளது. இதையடுத்து அவற்றை அறுவடை செய்து சீனா விண்வெளி வீரர்கள் சாதனை படைத்துள்ளனர். முன்னதாக விண்வெளியில் காய்கறி செடிகளை வளர்த்து அறுவடை செய்யும் முயற்சியில் அமெரிக்கா, ரஷியா, ஐரோப்பிய விண்வெளி வீரர்கள் சாதனை படைத்து இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரான்

## “இஸ்லாமிய நாடுகள் ஒன்றிணைய வேண்டும்”

“இஸ்ரேல் ஆக்கிரமிப்புக்கு எதிராக இஸ்லாமிய உலகம் ஒன்றிணைய வேண்டும்” என்று ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரெய்சி தெரிவித்துள்ளார்.

மேலும் “இஸ்லாமிய நாடுகள் ஒற்றுமையாக இருந்திருந்தால் இஸே்ரல் இன்று இதுபோல் காசாவில் குண்டுமழை பொழிந்திருக்க முடியாது” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈரானுக்கான சவூதி தூதர் அப்துல்லா பின் சவுத் அல் அனாஸியை வரவேற்றுப் பேசிய போது ஜனாதிபதி இப்ரஹிம் ரைஸி கூறியதாவது,

“ஒன்றிணைந்த முஸ்லிம் நாடுகளின் ஒருமித்த நிலைப்பாடு இன்று இஸ்ரேலிய ஆக்கிரமிப்பில் இருந்தும், அதன் மேற்கத்திய ஆதரவாளர்களிடமிருந்தும் அவர்களின் அடக்குமுறைகளிலும் முஸ்லிம்களைக் காப்பாற்றியிருக்கும். இனியாவது இஸ்லாமிய நாடுகளின் ஒற்றுமை ஓங்க வேண்டும்” என தெரிவித்துள்ளார்.



அகில இலங்கை ரீதியிலான பெண்களுக்கான கூடைப்பந்தாட்டம்:

## சம்பியனான யாழ். அணிக்கு பாராட்டு விழா



■ பு.கஜிந்தன்

அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாண மாவட்ட அணி சம்பியனான நிலையில், இதற்கான பாராட்டு விழா யாழ். மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில், இத்தொடரில் பங்குபற்றிய வீராங்கனைகள் கௌரவிக்கப்பட்டதோடு, அரச அதிபரினால் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஆந்திரா

## தடியடி திருவிழாவில் 2 பேர் பலி



ஆந்திர மாநிலம் கர்நூல் அருகே விஜயதசமியை முன்னிட்டு நடந்த தடியடி திருவிழாவில் 2 பேர் உயிரிழந்துள்ளதுடன், 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். தேவர்கட் மலையில் புகழ்பெற்ற மல்லேஸ்வர சுவாமி கோயிலில் ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் விழாவில் உற்சவ மூர்த்திகளை கைப்பற்றுவதற்காக 23 கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் தடியடி நடத்தி மோதுவது குறிப்பிடத்தக்கது.

## சிற்றியிலிருந்து விலகும் கல்வின் பிலிப்ஸ்?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் மத்திய களவீரரான கல்வின் பிலிப்ஸ்ஸை அடுத்தாண்டு ஜனவரி மாதத்தில் கழகத்தை விட்டு வெளியேற அக்கழகம் அனுமதிக்கும் எனக் கூறப்படுகிறது.

சிற்றியில் இணைந்ததன் பின்னர் 26 வயதான பிலிப்ஸுக்கு விளையாடும் வாய்ப்பு அரிதாகவே இருந்தது. இதேவேளை, இன்னொரு பிறீமியர் லீக் கழகமான வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டின் மத்தியகளவீரரான லூகாஸ் பக்கெட்டாவைக் கைச்சாத்திட சிற்றி ஆர்வம் காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மிசோரம்

## “மோடியுடன் இணைந்து மேடை ஏற மாட்டேன்”

கடந்த 2018ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் மிசோ தேசிய முன்னணி (எம்என்எப்) 26 இடங்களை வென்று ஆட்சியை பிடித்தது. இந்த சூழலில் வரும் 30ஆம் திகதி மிசோரம் மாநிலத்தின் மேற்கு பகுதியில் பிரதமர் மோடி, தேர்தல் பிரசாரம் செய்ய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து மிசோரம் முதல்வர் ஜோரம்தங்கா, “மிசோரம் மக்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள். மணிப்பூரில் தேவாலயங்களை எரித்தபோது எங்கள் மக்கள் அதற்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்தனர். இத்தகைய சூழலில் பா.ஜ.கவுடன் பரிவு காட்டுவது எங்கள் கட்சிக்கு பின்னடைவாக அமையலாம்.

அதனால் பிரதமர் மோடி தனியாக பிரசாரம் மேற்கொள்வதும், நான் தனியாக பிரசாரம் மேற்கொள்வதும் தான் சரியாக இருக்கும்.

காங்கிரஸூக்கு எதிரானது எங்கள் கட்சி. அதனால் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்தோம்.

ஆனால், மிசோரம் மாநிலத்தில் அவர்கள் தலைமையில் இணைந்து செயல்பட விரும்பவில்லை” என்று கூறியுள்ளார்.



உத்தர பிரதேசம்

## இரத்தம் ஏற்றிய 14 சிறார்களுக்கு எச்.ஐ.வி

உத்தர பிரதேசம் மாநிலத்தின் கான்பூர் நகரில் உள்ள லாலா லஜபதிராய் அரசு மருத்துவமனையில், வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர், சிறுமியர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளனர். இதற்கிடையே, 6 முதல் 16 வயதுக்கு உட்பட்ட 14 சிறார்களுக்கு தானம் பெறப்பட்ட இரத்தம் செலுத்தப்பட்டதாகத் தெரிகிறது. இந்நிலையில், இரத்தம் ஏற்றப்பட்ட 14 சிறார்களுக்கு எச்.ஐ.வி மற்றும் ஹெபடைடிஸ் நோய் இருப்பது கண்டறியப்பட்டமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதில் 2 பேருக்கு எச்.ஐ.வி, 7 பேருக்கு ஹெபடைடிஸ் பி, 5 பேருக்கு ஹெபடைடிஸ் சி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

விசாரணையில் சிறார்கள் அனைவரும் கான்பூர், பரூகாபாத், இட்டாவா மற்றும் கன்னோஜ் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதும் இரத்தத்தைப் பரிசோதிக்காமல் சிறார்களுக்கு செலுத்தப்பட்டதும் தெரியவந்துள்ளது இதுகுறித்து பொலிஸார் மேலதிக விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஸ்பானிய லா லிகாத் தொடர்:

## சமநிலையில் றியல் மட்ரிட்-செவிய்யா போட்டி

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (24) இரவு நடைபெற்ற றியல் மட்ரிட்டுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் செவிய்யா சமப்படுத்தியது.

மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட கோலை டனி கர்வகால் பெற்றதோடு, செவிய்யா சார்பாகப் பெறப்பட்ட கோலானது கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 26 ஒக்டோபர் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.